நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :29.05.2020

2020-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.இந்நிலையில் கழிவு நீர் குழாய்கள் பதிக்கப்பட்ட சாலைகளில் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாததால் பலமுறை சிறு சாலை விபத்துகள் அவ்வவ்போது நடைபெற்று வருகிறது. மேலும், தற்பொழுது தெற்கு-மேற்கு பருவ மழையால் சாலைகள் மிகவும் சேதம் அடைந்து வருகிறது. எனவே, அவசர அவசியம் கருதி சேதமடைந்த சாலைகள் சீரமைக்கவும், புறநகர் பகுதியில் சாலைகளை அமைக்கவும் ரூ.5.00 கோடிக்கு திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு (TURIP 2020-21) திட்டத்தின் கீழ் மேற்கொள்ள திட்ட நிதி மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | சாலையின் அகலம் (மீட்டர்) | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | சிப்பம் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கொளத்துார் ரோடு லிட்டில் பிளவர் பள்ளி முதல் குள்ளகரடு வரை (ராஜீவ் நகர் வழியாக) ஏற்கனவே உள்ள தார் சாலையை சீரமைத்தல் | 2600 | 4.10 | 130.00 | சிப்பம் நெ. I |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட எஸ்.டி செட்,டாக்டர்.வேணுகோபாலசுவாமி வீதி,ராஜீவ் நகர் புதிய விரிவாக்கப்பட்ட பகுதி,பரிசல் துறை வீதி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தார் சாலையை சீரமைத்தல் | 2500 | 4.10 | 125.00 | சிப்பம் நெ. II |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பிள்ளையார் கோவில் வீதி,முனியப்பன் கோவில் வீதி 1 மற்றும் 2, நரசிம்மன் மருத்துவமனை ரோடு,பரிசல் துறை வீதி,பழைய மார்கெட் வீதி,கோயில் மட வீதி,வேட்டுவர் சந்து ,பழைய தபால் ஆபீஸ் பின்புறம் ரோடு,மாரியம்மன் கோவில் வீதி பள்ளிவாசல் ரோடு,கிருஷ்ணா சந்து,மீனாட்சியம்மன் கோவில் வீதி,வெள்ளார் வீதி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தார் சாலையை சீரமைத்தல் | 2560 | 4.10 | 120.00 | சிப்பம் நெ. III |
| 4 | சத்தியமங்கலம நகராட்சி பகுதிக்கு உட்பட்ட தண்டுமாரியம்மன் கோவில் முதல் வீதி,தண்டுமாரியம்மன் கோவில் மேற்கு வீதி,தண்டுமாரியம்மன் கோவில் 4 வது வீதி ,தண்டுமாரியம்மன் கோவில் 7 வது வீதி,அன்னையன் வீதி,போயர் வீதி,ராஜீவ் நகர் கொடிவேரி சந்திப்பு,எம்.ஜி.ஆர். ஆண்கள் பள்ளி எதிர்புறம் , எம்.ஜி.ஆர். நகர் தேசிய நெடுஞ்சாலை (உதயமரத்து மேடு வார்டு எண்.1) | 2690 | 4.10 | 125.00 | சிப்பம் நெ. IV |
| | **மொத்தம்** | 10350 மீட்டர் | | ரூ.500.00 | |

**அலுவலக குறிப்பு : -**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2 )மேற்கண்ட சாலைகள் தமிழ்நாடு நகர்புற சாலைகள் திட்டம் (TURIP -2020-21 ) திட்டத்தில் முழு மானியத்துடன் செயல்படுத்தலாம்.
3) திட்ட நிதி போக நகராட்சி பங்கு தொகையினை வருவாய் நிதியில் பயன்படுத்தி கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 357 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :26.05.2020

2020-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 358 பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 359 பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் : 3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந. க. எண். 7366/2016/UPA நாள்.18.12.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் 3984/2013/B1 நாள்.24.12.2019 ஆகிய கடிதங்களில் நகராட்சி பகுதிகளில் வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகளை கண்டறியவும், வியாபாரத்தினை சீராக செயல்படுத்தவும், விற்பனை சான்று மற்றும் விற்பனை திட்டத்தை தயாரிப்பதற்கான இரண்டு சான்று மாதிரிகளின்படி, தெருவோர வியாபாரிகளுக்கு விற்பனை சான்று வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு வீட்டு வசதி மற்றும் நகர விவகார அமைச்சர் அவர்களின் ந. க. எண். 12017 (30) /1/2019- UPA-II-UD நாள். 06.06.2019 ஆம் தேதிய கடிதத்தில் தெருவோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து தமிழ்நாடு அரசு பொது விதி 4 வது பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி QR மற்றும் பார் குறியீடு அடிப்படையிலான அடையாள அட்டையினை வழங்கும் போது தெருவோர வியாபாரிகளின் முழு விபரங்களை பெற முடியும் என்றும் இதன் வாயிலாக, வங்கிகளின் மூலமாக கடன் உதவி பெறவும், வங்கிக் கணக்கு துவக்கவும், நகராட்சியால் வேறு உதவி தொகை வழங்கும் போதும் சுலபமாக வியாபாரிகளின் விபரங்களை சேகரிக்கவும், அடையாளம் காண்பதற்காகவும் QR குறியீட்டை வலைதளத்துடன் இணைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், GIS மூலம் சர்வே செய்யவும், smart chip, QR மற்றும் Bar Code உடன் கூடிய அடையாள அட்டையினை தெருவோர வியாபாரிகளுக்கு வழங்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் உள்ள வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தெருவோர வியாபாரிகள் முறையாக வியாபாரம் செய்யவும், நகராட்சியில் உள்ள மொத்தம் 99 நபர்களில் ( தெருவோர வியாபாரிகள்) வேறு மாநிலத்திற்கு இடம் பெயர்ந்தவர்கள் - 4 நபர்கள், இறப்பு - 3 நபர்கள், மீதமுள்ள 92 நபர்களுக்கு QR மற்றும் smart card வழங்கவும், புதியதாக தெருவோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து புதிய நபர்களை விடுபடாமல் சேர்க்கவும், தனியார் நிறுவனம் வாயிலாக கணக்கெடுப்பு செய்து smart அடையாள அட்டை வழங்க உத்தேச செலவினம் ரூ. 1,00,000/- ( ரூபாய் ஒரு லட்சம்) ஆகும். இச்செலவினத்தை பொது நிதியில் இருந்து வழங்கவும், மேற்கண்ட பணியினை தனியார் நிறுவனம் மூலமாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2731/2014/F1)

தீர்மானம் எண் : 360 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 4

சத்தியமங்கல் நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய 23 ( BOV) பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் Sixth Round Meeting of Swachh Bharath Mission கூட்டம் 20.08.2019 முதல் 26.08.2019 வரை நடைபெற்றது. அதன் கூட்ட நிகழ்வு (Meeting Minutes) வரிசை எண். 4-ல் திடக்கழிவு மோண்மையில் முதன்மை சேகரத்தில் பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் (BOV) ஆண்டு முழுவதும் எந்த ஒரு இடையூறுமின்றி இயங்க வேண்டும் எனவும், தகுதி வாய்ந்தவர் மூலம் Annual Maintenance செய்திடவும் அறிவுறுத்தியுள்ளார். ஆண்டு பராமரிப்பு செய்திட ரூபாய் நான்கு லட்சத்து தொன்னூராயித்திற்கு ( Rs.4,90,000/-) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண் 1337/2019/எச். 1)

தீர்மானம் எண் : 361 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை இனத்திற்கு வரும் 31.05.2020 உடன் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை எண் (நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள். 03.07.2007 இன்படி மேலும் நீடித்து கொள்வது குறித்த விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக் கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டதனை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.06.2020 முதல் 31.05.2023 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அதே உரிமதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | வரிவிதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை ரூ. | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை வணிக வளாகம் | 4 | 061/SC03/00052 | ஆர். ரவிக்குமார் | 9000/- | 10,350/- | 01.06.2020 முதல் 31.05.2023 வரை |

அலுவலகக்குறிப்பு : -

மேற்கண்ட கடை இனம் வரும் 31.05.2020 உடன் முடிவடைவதையொட்டி மேலும் அரசாணை 92-இன்படி உரிய உரிம கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே, மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-இன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க.எண். 300/2016/அ3)

தீர்மானம் எண் : 362 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் காலியாகவுள்ள இரு ஓட்டுநர் பணியிடங்கள் மற்றும் பொறியியல் பிரிவில் காலியாகவுள்ள ஒரு ஓட்டுநர் பணியிடம் என மூன்று ஓட்டுநர் பணியிடங்களை இவ்வலுவலக ந.க. எண். 652/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பயன்படுத்திக்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்போது பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர்.

தற்போது இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் எதிர்வரும் 30.06.2020 உடன் முடிவடையவுள்ள நிலையில் இப்பணிக்கு மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 வரையிலான காலத்திற்கு மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டியுள்ளது.

எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந. க. எண். 12800/2019/ஜீ2 நாள்.20.09.2019 இன்படி அனுமதிக்கப்பட்ட தினக்கூலி வீதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,10,000/- த்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்ப :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முதல்நிலை சேகரிப்பு பணியின் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

( ந. க. எண். 540/2020/எச். 1)

தீர்மானம் எண் : 363 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண்.GO(Ms) No.166 நாள் 23.11.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இன் படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி பள்ளிகள் உள்ளன

| வ எண் | பள்ளி விபரம் | தேவைப்படும் பணியாளர் விபரம் |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2 | நகராட்சி உயர்நிலைப் பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆர்.எம்.பி.நகர் | 2 |
| 4 | நகராட்சி நடுநிலைப்பள்ளி - சத்தி -1. | 3 |
| 5 | நகராட்சி துவக்கப் பள்ளி,கொளத்தூர் | 2 |
| 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,வடக்குபேட்டை | 4 |
| | மொத்தம் | 16 |

இவ்வலுவலக ந. க. எண். 650/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2019 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பள்ளிக்கழிவறைகளை துாய்மையாக பாமரித்தல் பணியினை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்போது 30.06.2020 உடன் மேற்படி பணியின் காலம் நிறைவு பெறுவதால், மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 முடியவுள்ள ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் 6 பள்ளிகளுக்கு 16 பணியாளர்களை ஜீலை 2020 முதல் ஜீன் 2021 வரை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் தனியார் ஒப்பந்தம் மூலம் நியமித்து கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.31,00,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறத.

அலுவலக குறிப்பு :- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினத்தை 2020-21 ஆம் ஆண்டின் கல்வி நிதியின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.541/2020/எச்-1)

தீர்மானம் எண் : 364 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிப்பகுதியில் பொது சுகாதாரப்பிரிவில் சேகரம் செய்யப்படும் மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்குகளை சிமெண்ட் ஆலைக்கு லாரி மூலம் அனுப்பும் பணியினை தனியார் வாகனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 27.3.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஒரு கிலோ மீட்டருக்கு ) |
|---|---|---|
| 1 | Vino Constructions Bhavanisagar | 55.00 |
| 2 | C.P.Gopalakrishnan Contractor | 60.00 |

இவற்றில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு :- 1) குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Vino Constructions Bhavanisagar என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.330/2020/எச்-1.)

தீர்மானம் எண் : 365 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.